பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 03 செவ்வாய்க்கிழமை 17.05.2022 கதிர் 86

## O/L பரீட்சை தொடர்பான மேலதிக வகுப்புகளுக்கு இன்று இரவு முதல் தடை

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை தொடர்பான மேலதிக வகுப்புகள், கருத்தரங்குகள், விரிவுரைகள் மற்றும் செயலமர்வுகள் இன்று நள்ளிரவு 12 மணி முதல் பரீட்சை முடியும் வரை தடை செய்யப்படவுள்ளது.

இந்த விதிமுறைகள் மீறப்படுகின்றன என ☞2

# பிரதி சபாநாயகரானார் அஜித் ராஜபக்ஷ



## மண்கவ்வினார் ரோஹிணி

பிரதி சபாநாயகராக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் போட்டியிட்ட அஜித் ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று இடம்பெற்ற இரகசிய வாக்கெடுப்பில் அவர் தெரிவாகியுள்ளார்.

அஜித் ராஜபக்ஷவுக்கு ஆதரவாக 109 வாக்குகளும், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட ரோஹிணி குமாரி கவிரத்னவுக்கு ஆதரவாக 78 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இதனூடாக இலங்கை அரசியல் வரலாற்றில் முதலாவது பெண் பிரதி சபாநாயகரைத் தெரிவு செய்வதற்குக் கிட்டிய வாய்ப்பு, மீண்டுமொருமுறை தவறவிடப்பட்டுள்ளது. ஆளும் மற்றும் எதிரணி உறுப்பினர்களுக்கிடையில் பொது இணக்கப்பாடின்மையாலேயே இந்த வரலாற்று வாய்ப்பு கைநழுவிப்போயுள்ளது.

நாடாளுமன்றம் இன்று முற்பகல் சபாநாயகர் ☞2

# ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணை; சபையில் விவாத முயற்சி முறியடிப்பு

## சுமந்திரனின் யோசனைக்கு ஆளுங்கட்சி எதிர்ப்பு

**நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளை இடைநிறுத்தி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அதிருப்தியை வெளிப்படுத்தும் பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக்கொள்வதற்கு முன்னெடுக்கப்பட்ட முயற்சி ஆளுங்கட்சியால் தோற்கடிக்கப்பட்டது.**

**ஜனாதிபதிக்கு அதிருப்தி தெரிவிக்கும் பிரேரணையை இன்று விவாதத்துக்கு எடுத்துக்கொள்வதற்குக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தாலும் அதற்கு ஆளுங்கட்சி எதிர்ப்பை வெளியிட்டது.**

**ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணையை விவாதத்துக்கு எடுப்பதற்காக, நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளை இடைநிறுத்தும் யோசனையை எதிரணியின் சார்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. எம்.ஏ. சுமந்திரன் முன்வைத்தார். அதனை ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. லக்ஷமன் கிரியெல்ல வழிமொழிந்தார்.** ☞2



## குறிஞ்சிப்பிட்டி விபத்தில் சீனப் பிரஜை ஒருவர் சாவு

### இன்னொரு சீனப் பெண் காயம்



பாலாவி - கற்பிட்டி பிரதான வீதியின் குறிஞ்சிப்பிட்டி பகுதியில் இன்று இடம்பெற்ற வீதி விபத்தில் சீன நாட்டைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளார். ☞2

## 21ஆவது திருத்தச் சட்டம் குறித்து சட்டமா அதிபருடன் ரணில் பேச்சு

செயலிழக்கச் செய்யப்பட்டுள்ள அரசமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டத்தை உயிர்ப்பித்து மீண்டும் நாடாளுமன்றத்தின் ஊடாக நடைமுறைப்படுத்திக் கொள்ளும் வகையில் கொண்டு வரப்படவுள்ள 21ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சட்டமா அதிபருடன் இன்று ☞2

## அதாவுல்லாவும் ரணிலுக்கு ஆதரவு



நாடாளுமன்ற உறுப்பினர் அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

தேசிய காங்கிரஸின் உயர்பீடக் கூட்டம் நேற்றிரவு கொழும்பில் நடைபெற்றது. ☞2

## யாழில் மீனவர் சடலமாக மீட்பு!





யாழ்ப்பாணம், கொழும்புத்துறைப் பகுதியில் இருந்து கடற்றொழிலுக்குச் சென்றவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கொழும்புத்துறை, உதயபுரம் பகுதியைச் ☞2

## மஹிந்தவும் நாமலும் தலைமறைவு; சபை அமர்வில் பங்கேற்கவில்லை!



முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் இன்றைய நாடாளுமன்ற அமர்விலும் பங்கேற்கவில்லை. எனினும், முன்னாள் அமைச்சர்களான சமல் ராஜபக்ஷ, சஷீந்திர ராஜபக்ஷ ஆகியோர் சபை அமர்வில் பங்கேற்றிருந்தனர்.

'மே 9' சம்பவத்தின் பின்னர் பிரதமர் பதவியை இராஜிநாமா செய்த மஹிந்த ராஜபக்ஷ, மறுநாள் 10ஆம் திகதி ☞2

## போராட்டக்காரர்கள் மீதான தாக்குதல்; மஹிந்தவின் சகாக்கள் இருவர் கைது!

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் சகாக்களான மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் அமல் சில்வா மற்றும் மொறட்டுவை நகர சபை ஊழியர் ஒருவர் ஆகியோர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் ☞2

## அனைத்து மக்களுக்கும் சேவையாற்றுவார் ரணில்

### விஜயகலா நம்பிக்கை

ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்த - வாக்களிக்காத மக்கள் என்ற பிரிவினை காட்டாது அனைவருக்கும் நாட்டின் பிரதமராகப் பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்க சிறந்த சேவை புரிவார்.

- இவ்வாறு முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சரும் யாழ்ப்பாணம் மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளருமான விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.



கடந்த வாரம் புதிதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ☞2

## குறிஞ்சிப்பிட்டி விபத்தில் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் தங்கியிருந்த சீனாவைச் சேர்ந்த 45 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் இருந்து வியாபார நோக்கத்திற்காக புத்தளம் - கற்பிட்டி பகுதிக்கு வருகை தந்த சீனாவைச் சேர்ந்த பெண் ஒருவர் உட்பட இருவர் பயணம் செய்த சொகுசு கார் விபத்துக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் இடம்பெற்ற போது, பாலாவி பகுதியிலிருந்து கற்பிட்டி பகுதியை நோக்கி சீனர்கள் பயணித்த சொகுசு கார், வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் இருந்த வேகத்தை குறித்துக் காட்டும் இரும்புக் கம்பி ஒன்றின் மீது மோதியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பின்னர், விபத்துக்குள்ளான கார் வீதியில் கவிழ்ந்து சுமார் 50 மீற்றர் வரை இழுத்துச் செல்லப்பட்டு, வீதியோரத்தில் உள்ள தொலைபேசி தூண் ஒன்றின் மீதும் மோதி கடுமையாக சேதமடைந்துள்ளதாகக் கற்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது அங்கிருந்தவர்கள் உடனடியாக அந்த சொகுசு காரில் பயணம் செய்த பெண் உட்பட இருவரையும் கற்பிட்டி வைத்தியசாலையில் சேர்த்த போதிலும், அந்த வாகனத்தைச் செலுத்தி சென்ற சீனரான 45 வயதுடைய நபர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

மேலும், காயமடைந்த சீன நாட்டு பெண் தொடர்ந்தும் கற்பிட்டி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்தில் உயிரிழந்த நபரின் சடலம், பிரேத பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்படும் எனவும் பொலிஸார் கூறினர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் கற்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மஹிந்தவும் நாமலும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலரிமாளிகையில் இருந்து வெளியேறினார். அதன்பின்னர் திருகோணமலை கடற்படைத் தளத்தில் தங்கவைக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் கூட்டத்திலும் மஹிந்த, நாமல் ஆகியோர் பங்கேற்கவில்லை. இன்றைய சபை அமர்விலும் அவர்கள் கலந்துகொள்ளவில்லை.

இதேவேளை, 'மே 9' சம்பவத்துக்கு முன்னர் அமெரிக்காவுக்குச் சென்றிருந்த முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இன்னமும் நாடு திரும்பவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## போராட்டக்காரர்கள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு - காலிமுகத்திடல் மற்றும் அலரிமாளிகைக்கு அருகில் 'கோட்டா கோ கம' மற்றும் 'மைனா கோ கம' போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டமை தொடர்பில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு ஒரு வாரம் கடந்துள்ள போதிலும் சம்பவம் தொடர்பில் இதுவரையில் ஒருவர் மாத்திரமே கைதுசெய்யப்பட்டிருந்தார் என்று முன்னராகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் அமல் சில்வாவும், மொறட்டுவை நகர சபை ஊழியர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய 78 பேரை அடையாளம் காண்பதற்காகப் பொலிஸார் தற்போது பொதுமக்களின் உதவியைக் கோரியுள்ளனர்.

அவர்களின் படங்களை சமூக வலைத்தளங்களில் வெளியிடுவதற்குப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## அனைத்து மக்களுக்கும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்றமை தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது நாடுபூராகவும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்த, வாக்களிக்காத மூவின மக்களுக்காகவே பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுள்ளார்.

இவர் கிடைக்கப்பெற்றுள்ள பிரதமர் பதவியின் மூலம் வாக்களித்த மக்கள், வாக்களிக்காத மக்கள் என்ற பிரிவினை காட்டாது இன, மத பேதமின்றி மூவின மக்களுக்கும் சமமாகச் சேவை புரிவார். இது தொடர்பில் எவரும் அச்சம்கொள்ளத் தேவையில்லை - என்றார்.

## அதாவுல்லாவும் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போதே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சுப் பதவி ஏற்காதிருக்கவும், எதிரணியில் இருந்து மக்கள் நலத் திட்டங்களுக்கு ஆதரவளிக்கவும் இதன்போது முடிவெடுக்கப்பட்டுள்ளது.

## யாழில் மீனவர் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த அந்தோனிப்பிள்ளை டென்சில் ராஜேந்திரன் (வயது 53) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்று அவரது மகனுடன் தொழிலுக்குச் சென்றவேளை கடலில் தவறி விழுந்து காணாமல்போன நிலையில், மீனவர்கள் தேடிவந்த நிலையில் இன்று நெடுந்தீவுக் கடற்பரப்பில் கரையொதுங்கிய நிலையில் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## 21ஆவது திருத்தச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்தாலோசனை மேற்கொண்டுள்ளார்.

நிறைவேற்று அதிகாரத்தை ஒழித்து அந்த அதிகாரத்தை நாடாளுமன்றத்துக்குப் பெற்றுக்கொடுக்கும் பொருட்டு நல்லாட்சி அரசால் கொண்டுவரப்பட்ட 19 ஆவது திருத்தச் சட்டம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு கொண்டுவந்த 20ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக இரத்துச் செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், 19ஆவது திருத்தச் சட்டத்தை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற வகையில் அரசியல் கட்சிகள், புத்திஜீவிகள் மற்றும் பொதுநிலையினர் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்து வந்த நிலையில் அதற்கான முஸ்தீபுகளை அரசியல் கட்சிகள் மேற்கொண்டிருந்தன.

20ஆவது திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்வதற்கும் 19ஆவது திருத்தச் சட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கான 21ஆவது திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு அதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று சட்டமா அதிபருடன் கலந்தாலோசனை மேற்கொண்டுள்ளார் என்று தெரியவருகின்றது.

## ஜனாதிபதிக்கு எதிரான .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த யோசனைக்கு ஆளுங்கட்சி உடன்படவில்லை. நிலையியல் கட்டளைகளை இடைநிறுத்துவது தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று அமைச்சர் தினேஷ் குணவர்தன வலியுறுத்தினார். இதையடுத்து சுமந்திரனின் யோசனை மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதன்போது நிலையியல் கட்டளையை இடைநிறுத்த ஆதரவாக 68 வாக்குகளும், எதிராக 119 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

வாக்கெடுப்பில் ஆளுங்கட்சி வெற்றி பெற்றதால் ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணை விவாதத்துக்கு வரவில்லை.

## பிரதி சபாநாயகரானார் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

பிரதி சபாநாயகராக இரண்டாவது தடவையாகவும் தெரிவுசெய்யப்பட்ட ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய அப்பதவியை மீண்டும் இராஜினாமா செய்ததால், நாடாளுமன்றத்தில் இன்று பிரதி சபாநாயகருக்கான தேர்வு முதல் விடயமாக நடைபெற்றது.

இதன்போது பிரதி சபாநாயகர் பதவிக்கு ரோஹிணி குமாரி கவிரத்னவின் பெயரை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ முன்மொழிய, அதனை எதிரணி பிரதம கொறடாவான லக்ஸ்மன் கிரியெல்ல வழிமொழிந்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் சார்பில் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற அஜித் ராஜபக்ஷவின் பெயரை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் பிரேரித்தார்.

இவ்வாறு பிரதி சபாநாயகர் பதவிக்கு இருவரின் பெயர்கள் முன்மொழியப்பட்டதால், அதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர், 10 கட்சிகளின் கூட்டணியினர் உள்ளிட்டவை கடும் எதிர்ப்பை வெளியிட்டன.

வாக்கெடுப்பின்றி, இணக்கப்பாட்டுடன் பிரதி சபாநாயகர் தெரிவுசெய்யப்பட வேண்டும், எனவே, நாடாளுமன்றத்தை ஒத்திவைத்து, கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி முடிவொன்றை எடுக்குமாறும் அவர்கள் வலியுறுத்தினர்.

அத்துடன், இவ்விவகாரம் தொடர்பில் ஆளும் மற்றும் எதிரணி உறுப்பினர்கள் கருத்துக்களை முன்வைத்தனர். இதனால் சபையில் கடும் சொற்போர் மூண்டது.

இதையடுத்து விரும்பினால், இரு வேட்பாளர்களில் ஒருவரின் பெயரை நீக்கிக்கொள்ளுமாறு பெயரை முன்மொழிந்தவர்களிடம் சபாநாயகர் கோரிக்கை விடுத்தார். அதற்கு இரு கட்சிகளும் உடன்படவில்லை.

இறுதியில் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

அதில் அஜித் ராஜபக்ஷவுக்கு 109 வாக்குகளும், ரோஹிணி குமாரி கவிரத்னவுக்கு 78 வாக்குகளும் அளிக்கப்பட்டன. 23 வாக்குகள் நிராகரிக்கப்பட்டன. இதனடிப்படையில் கூடுதல் வாக்குகளைப் பெற்ற அஜித் ராஜபக்ஷ பிரதி சபாநாயகராகத் தெரிவுசெய்யப்பட்டார். (நிராகரிக்கும் வகையில் வாக்களிப்பு இடம்பெறும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, 10 கட்சிகளின் கூட்டணி என்பன அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.)

பிரதி சபாநாயகர் பதவிக்குப் பெண் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை, பொது இணக்கப்பாட்டுடன் தெரிவு செய்யுமாறு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்திருந்தார். அந்தக் கோரிக்கையை அரச பங்காளியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி ஏற்றுக்கொள்ளவில்லை.

சர்வகட்சி அரசு, தேசிய இணக்கப்பாட்டு அரசு என அறிவிப்புகள் வந்தால் கூட, பிரதி சபாநாயகர் தேர்வில்கூட கட்சிகளிடையே இணக்கப்பாடு இன்மை, மக்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆசிரியராகத் தொழிலாற்றிய ரோஹிணி குமாரி கவிரத்ன, தனது கணவரான சஞ்சீவ கவிரத்னவின் மறைவின் பின்னர் தீவிர அரசியலில் இறங்கினார்.

2015ஆம் ஆண்டு பொதுத்தேர்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் மாத்தளை மாவட்டத்தில் களமிறங்கிய அவர், 41ஆயிரத்து 766 வாக்குகளைப் பெற்று நாடாளுமன்ற அரசியலை ஆரம்பித்தார்.

2020 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் மாத்தளை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்ட இவர், 27 ஆயிரத்து 587 வாக்குகளைப் பெற்று சபைக்குத் தெரிவானார். மாத்தளை மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட ஐந்து ஆசனங்களில் நான்கை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கைப்பற்றிய நிலையில், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் இவர் மட்டுமே தெரிவானார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் பிரதி சபாநாயகர் பதவியை வகித்தவர்கள் விபரம் வருமாறு:-

1. ஆர். ஏ. த மெல்
2. எச். டபிள்யூ. அமரசூரிய
3. சேர். அல்பேட் பீரிஸ்
4. எச். எஸ். இஸ்மாயில்
5. பியசேன தென்னக்கோன்
6. ஆர். எஸ். பெல்பொல
7. பௌ்னாந்து வர்ணகுலசூரிய
8. டி.ஏ. ராஜபக்ஷ
9. சீ. எஸ். சேர்லி கொரெயா
10. சேர் ராசிக் பரீட்
11. எம். சிவசிதம்பரம்
12. ஐ. ஏ. காதர்
13. எம். ஏ. பாக்கீர் மாக்கார்
14. நோமன் வைத்தியரத்ன
15. காமினி பொன்சேக்கா
16. அனில் குமார முனசிங்க
17. மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க
18. கீதாஞ்சன குணவர்தன
19. பியங்கர ஜயரத்ன
20. சந்திம வீரக்கொடி
21. திலங்க சுமதிபால
22. ஜே.எம். ஆனந்த குமாரசிறி
23. ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய
24. அஜித் ராஜபக்ஷ

## மேலதிக வகுப்புகளுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏதேனும் தகவல் கிடைத்தால், அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கோ அல்லது பரீட்சைகள் திணைக்களத்துக்கோ அறிவிக்குமாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை எதிர் வரும் 23ஆம் திகதி முதல் ஜூன் மாதம் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ரணிலுக்கு அர்ச்சனை

தென்னிலங்கையில் ராஜபக்ஷக்களுக்கு – ஆட்சியாளர்களுக்கு – எதிராக வெடித்த சித்திரை புரட்சியும், வைகாசி எழுச்சியும் வந்த வேகத்தில் அடங்கி விடுமா அல்லது மீண்டும் வீறுகொண்டு எழுமா என்பது அடுத்து வரும் நாள்களில் ஓரளவுக்கு உறுதியாகிவிடும்.

தலையிடிக்கு தலையணை மாற்றும் மருத்துவம் போல, பிரதமர் பதவியிலிருந்து மஹிந்தர் விலக, அதே அரசுக்கு தமது கட்சியின் சார்பில் ஒற்றை நபராக நாடாளுமன்றுக்குச் சென்ற ரணில் விக்கிரமசிங்க பிரதமர் ஆனார். அதுவே பெரிய அரசியல் மாற்றம் போல மக்களுக்கு பூச்சாண்டி காட்டப்படுகின்றது.

ஆட்சியாளர்களை – ஜனாதிபதிகள் இருந்து பிரதமர் வரை அனைவரையும் – வீட்டுக்குப் போகுமாறு வலியுறுத்தி மக்கள் கொதித்தெழுந்து வீதிக்கு இறங்க, மஹிந்தர் மட்டும் பிரதமர் பதவியிலிருந்து விலகுவதை பெரும் விவகாரமாக்கி, விடயத்தை அத்தோடு முடித்துவைக்க ஆட்சி தரப்பு நாடகமாடுகின்றது.

மஹிந்த பிரதமர் பதவி விலகுகின்றமையை ஒட்டி கட்டவிழ்த்து விடப்பட்ட கலவரங்கள், வன்முறைகள் அடங்கியமையோடு ஆட்சி மாற்றத்திற்கான மக்கள் எழுச்சியும் அடங்கி விட்டதாக காட்டப்படும் அங்கங்களே இப்போது அரங்கேறுகின்றன.

எது, எப்படி என்றாலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீது அதிருப்தி தெரிவிக்கும் பிரேரணையை இன்று முற்பகல் நாடாளுமன்றத்தில் நகர்த்த முற்பட்டமை மூலம் பலரின் முகத்திரையை இலங்கை மக்களின் முன்னால் அம்பலப்படுத்த வைத்திருக்கின்றார் கூட்டமைப்பு எம்.பியான எம்.ஏ.சுமந்திரன்.

நாடாளுமன்றத்திற்கு வெளியே மக்கள் 'கோட்டா கோஹோம்' என்றுதான் ஏககோரிக்கையை வலியுறுத்தி ஒற்றைக்காலில் நிற்கின்றார்கள்; போராடுகின்றார்கள்.

உள்ளே நாடாளுமன்றத்தில் அதே ஜனாதிபதிக்கு எதிரான – அவரது நடவடிக்கைகள், செயற்பாடுகள் தொடர்பாக எதிர்ப்பு தெரிவிக்கும் – பிரேரணையை விவாதத்திற்கு எடுக்க விடாமல் தடுப்பு – முட்டுக்கட்டை – போடும் நடவடிக்கையில் ஒரு தரப்பு எம்.பிக்கள் மும்முரமாக செயற்படுகின்றார்கள். இவ்விவகாரத்தில் பகிரங்க வாக்கெடுப்பு மூலம் அப்படி கோட்டாபயவுக்கு முண்டு கொடுத்து அவரது பதவி நிலையைத் தூக்கித் தாங்கிப் பிடிக்கும் எம்.பிக்கள் யார், யார் என்பதை நாட்டு மக்களுக்கு அம்பலப்படுத்தும் கைங்கரியத்தை கனகச்சிதமாக ஒப்பேற்றியிருக்கின்றார் சுமந்திரன்.

அது மாத்திரமல்ல, ஜனாதிபதி கோட்டாபயவுக்கு எதிரான இந்த பிரேரணையின் வடிவத்தைப் பார்த்து, பரிசீலித்து, திருத்தி, அங்கீகரித்து, அதனை காலிமுகத்திடலில் போராட்டம் நடத்தும் தரப்பினரிடம் காட்டி, இணக்கமும் பெற்ற ரணில் விக்கிரமசிங்க –

அதே பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பேன் என்று தாமாகவே இரண்டு தரம் பகிரங்கமாக அறிவித்த ரணில் விக்கிரமசிங்க –

இன்று பிரதமர் பதவி என்ற வேலை கிடைத்ததும் அந்தப் பிரேரணைக்கு எதிரான நிலைப்பாடு எடுத்துக் குத்துக்கரணம் அடித்தமை பெரும் வெட்கக்கேடான செயல் என்று விமர்சித்து, அவரின் முகமூடியை இன்று நாடாளுமன்றத்தில் கிழித்திருக்கின்றார் சுமந்திரன்.

ரணில் தன்னுடைய கொள்கைகளை – நீதியான நிலைப்பாடுகளை – பதவிக்காக விற்றுவிட்டார் என்று முகத்துக்கு நேரே குற்றம் சுமத்தியிருக்கிறார் சுமந்திரன்.

பாவம் ரணில் விக்கிரமசிங்க. பிரதமர் பதவிக்காக ராஜபக்ஷக்களுக்கு முண்டு கொடுக்கப் போன அவர், அதற்காக வாங்கிக் கட்டித்தானாக வேண்டும்.

# மஹிந்த எதிர்க்கட்சித் தலைவர் சதித்திட்டத்தின் ஓர் அங்கமே!



## ராஜித சேனாரத்ன சுட்டிக்காட்டு

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளுடன் பகிரங்கமாகக் கலந்துரையாடி உரிய உடன்படிக்கைக்கு அமைய அமைச்சரவையை உருவாக்கினால் மக்கள் அமைச்சரவையை ஏற்றுக்கொள்வார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித் துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர், இதுவரை கட்சிகளை அமைச்சரவையில் இணையுமாறு ரணில் அழைக்கவில்லை என்றாலும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தனித்தனியாக இரகசிய கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

கட்சிகளுடன் சம்பிரதாயமான வெளிப்படையான கலந்துரையாடலுக்குப் பின்னர் முறையான உடன்படிக்கைக்கு அமைவாக அமைச்சரவை அமைக்கப்பட்டால்தான் அனைவரும் அதனை ஏற்றுக்கொள்வர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இப்போதும் அரசியல் கட்சிகளுடன் வெளிப்படையான உரையாடல்களை நடத்த முடியும் என்றும் சரியான அரசாங்கத்தை அமைக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்படவுள்ளார் என வெளியான தகவல்களுக்கு பதிலளித்த ராஜித சேனாரத்ன, இந்த நடவடிக்கையும் சதித்திட்டத்தின் ஓர் அங்கமே எனத் தெரிவித் துள்ளார்.

மேலும் சஜித் பிரேமதாஸவிற்கு பிரதமர் பதவி வழங்கப்பட்டபோது அதை ஏற்க தாமதமாகிவிட்டார் என்ற குற்றச்சாட்டு தவறானது என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும் இடையிலான புரிந்துணர்வு இரண்டு வாரங்களுக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டது' என்றும் அவர் கூறியுள்ளார்.

# நீரேந்து பகுதிகளில் போதுமான மழை மின்சாரத் தடை 5 மணித்தியாலங்கள்!

நீரேந்துப் பகுதிகளில் போதிய மழை பெய்து வருவதால், அனல் மின் நிலையங்களைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டிய அவசியமில்லை.

எனவே அதிகபட்சமாக ஐந்து மணிநேரம் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்று இலங்கை மின்சார சபை பொறியியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

சோய்ஜிட்ஸ் மற்றும் மேற்கு கரை மின் உற்பத்தி நிலையங்களில் டீசல் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இதில் சோய்ஜிட்ஸ் மின்நிலையத்தில் உள்ள எரிபொருள் ஒரு நாளுக்கு மட்டுமே போதுமானதாக இருக்கும்.

அதே சமயம் மேற்கு கடற்கரை மின் நிலையத்தில் அதிகபட்சம் இரண்டு நாள்களுக்கு டீசல் உள்ளது என்று தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் அனல் மின் நிலையங்களைத் தவிர அனைத்து மின் உற்பத்தி மூலங்களையும் கருத்தில் கொண்டு, அதிகபட்ச மின்வெட்டு நேரம் 5 மணித்தியாலங்களாக இருக்கும் என்று மின்சார சபையின் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

# சொகுசு கார் விபத்து சீன நாட்டவர் சாவு!

பாலாவி – கற்பிட்டி பிரதான வீதியின் குறிஞ்சிப்பிட்டி பகுதியில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற வீதி விபத்தில் சீன நாட்டைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.



இலங்கையில் தங்கியிருந்த சீனாவைச் சேர்ந்த 45 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் இருந்து வியாபார நோக்கத்துக்காக புத்தளம் – கற்பிட்டி பகுதிக்கு வருகை தந்த சீனாவைச் சேர்ந்த பெண் ஒருவர் உட்பட இருவர் பயணம் செய்த சொகுசு கார் விபத்துக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் இடம்பெற்ற போது, பாலாவி பகுதியிலிருந்து கற்பிட்டி பகுதியை நோக்கி சீனர்கள் பயணித்த சொகுசு கார், வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் இருந்த வேகத்தை குறித்துக் காட்டும் இரும்புக் கம்பி ஒன்றின் மீது மோதியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பின்னர், விபத்துக்குள்ளான கார் வீதியில் கவிழ்ந்து சுமார் 50 மீற்றர் வரை இழுத்துச் சொல்லப்பட்டு, வீதியோரத்தில் உள்ள தொலைபேசி தூண் ஒன்றின் மீதும் மோதி கடுமையாக சேதமடைந்துள்ளதாகவும் கற்பிட்டி பொரிஸார் தெரிவித்தனர்.

இதன்போது அங்கிருந்தவர்கள் உடனடியாக அந்த சொகுசு காரில் பயணம் செய்த பெண் உட்பட இருவரையும் கற்பிட்டி வைத்தியசாலையில் சேர்ப்பித்தபோதிலும், குறித்த வாகனத்தை செலுத்தி சென்ற சீனரான 45 வயதுடைய நபர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

மேலும், காயமடைந்த சீன நாட்டு பெண் தொடர்ந்தும் கற்பிட்டி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

விபத்தில் உயிரிழந்த நபரின் சடலம், பிரேத பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்படும் எனவும் பொலிஸார் கூறினர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் கற்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இஸ்ரேல் பாதுகாப்பு படையினர் – பலஸ்தீனர்கள் இடையே மோதல்; 100க்கும் மேற்பட்டோர் காயம்



இஸ்ரேல் பாதுகாப்புப் படையினர் மற்றும் பலஸ்தீனியர்கள் இடையே நடைபெற்ற மோதலில் நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். பலஸ்தீனத்தின் மேற்குகரை மற்றும் காசா முனை பகுதியில் இருந்து இஸ்ரேல் மீது அவ்வப்போது தாக்குதல் சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன. இதற்கு இஸ்ரேல் தரப்பிலும் பதில் தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. இந்த நிலையில் கடந்த மாதம் 22ம் திகதி இஸ்ரேலிய பாதுகாப்பு படையினருக்கும் , பலஸ்தீனர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் படுகாயம் அடைந்த லாவிட் ஷெரீப் என்ற 21 வயதான பலஸ்தீன இளைஞர் நேற்று உயிரிழந்தார்.

இதனையடுத்து, உயிரிழந்த ஷெரீப்பின் உடல் அல் அக்சா இஸ்லாமிய மத வழிபாட்டு தலத்தில் வைக்கப்பட்டு பின்னர் ஜெருசலேம் பழைய நகர் பகுதியில் அடக்கம் செய்ய ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டது. அப்போது, இஸ்ரேலிய படையினர் பலஸ்தீனர்கள் மீது சிலர் கற்கள் வீசினர். எளிதில் தீப்பற்றக்கூடிய பொருள்களும் வீசப்பட்டன. இதனால், இருதரப்பினருக்கும் இடையே மோதல் வெடித்தது. இந்த மோதலில் 100 பேர் காயமடைந்தனர். இதில் 15க்கும் மேற்பட்டவர்கள் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இரு தரப்பினர் மோதலை அடுத்து ஜெருசலேமில் பாதுகாப்பு பன்மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

# வடகொரியாவில் பிடியை இறுக்கும் கொரோனா கிருமி

## மருந்து விநியோகத்தில் ஈடுபட ராணுவத்திற்கு கிம் உத்தரவு



வடகொரியாவில் கொரோனா தொற்று கிடுகிடுவென பரவி வரும் நிலையில், அத்தியாவசிய மருந்துகளுக்கு அந்நாட்டில் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

2 ஆண்டுகளாக உலகம் முழுவதும் கொரோனா பரவிய போதிலும் தங்கள் நாட்டில் நுழையவில்லை என்று வடகொரியா கூறி வந்தது. ஆனால் கடந்த 12ம் திகதி தலைநகர் பியாங்யாங்கில் இருந்து வெடித்து கிளம்பிய கொரோனா கிருமி, சில நாள்களில் வடகொரியா முழுவதும் தீவிரமாக பரவியுள்ளது. கொரோனா உயிரிழப்புகளும் அதிகரித்து வருகின்றன. இதுவரை 50இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்து இருக்கின்றனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன. நேற்று ஒரே நாளில் மட்டும் சுமார் 4 லட்சம் பேர் அறிகுறிகளுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் கொரோனா உறுதி செய்யப்பட்டவர்களின் விவரங்களையும் சரியான உயிரிழப்பு எண்ணிக்கைகளையும் வடகொரியா முறையாக அறிவிக்கவில்லை. இந்த நிலையில் ஆரம்பகட்ட சிகிச்சைக்கு தேவையான மருந்துகளுக்கு வடகொரியாவில் தட்டுப்பாடு ஏற்பட்டு இருப்பதாக கூறப்படுகிறது. இதையடுத்து இருப்பில் உள்ள மருந்துகளை உடனடியாக மருந்தகங்களுக்கு அனுப்பவும் மருந்தகங்கள் 24 மணி நேரமும் செயல்படவும் அதிபர் கிம் ஜாங் உன் உத்தரவிட்டுள்ளார். தலைநகர் பியாங்யாங்கில் உள்ள மருத்துவமனை மற்றும் மருந்தகங்களுக்கு அத்தியாவசிய மருந்துகளை விநியோகிக்கும் பணியில் ராணுவம் ஈடுபடவும் அதிபர் கிம் ஆணையிட்டுள்ளார். வடகொரியாவுக்கு தேவைப்படும் தடுப்பூசிகளை வழங்க தயார் என்று சீனாவும் தென்கொரியாவும் விருப்பம் தெரிவித்துள்ள போதும் அந்த மனிதாபிமான உதவிகளை வடகொரியா அரசு தற்போது வரை ஏற்றுக்கொள்ளவில்லை.

## 30 ஆண்டுகளுக்கு பிறகு

# பிரான்ஸ் நாட்டுக்கு பெண் ஒருவர் பிரதமராக பொறுப்பேற்க உள்ளார்



30 ஆண்டுகளுக்கு பிறகு பிரான்ஸ் நாட்டுக்கு பெண் ஒருவர் பிரதமராக பொறுப்பேற்க உள்ளார். தொழிலாளர் அமைச்சர் எலிசபெத்தை பிரதமராக அறிவித்தார் பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான்.

# அமெரிக்காவின் அடிமை பாகிஸ்தான் இம்ரான் குற்றச்சாட்டு முன்வைப்பு

பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் கடந்த மாதம் நடந்த நம்பிக்கையில்லா பிரேரணை மீதான வாக்கெடுப்பில் தோல்வி அடைந்த இம்ரான் கான் பிரதமர் பதவியில் இருந்து தூக்கியெறியப்பட்டார். அதன் பிறகு, அவர் நாட்டின் பல்வேறு பகுதிகளில் பேரணி, பொதுக்கூட்டங்கள் நடத்தி வருகிறார்.

இந்நிலையில், பஞ்சாப் மாகாணத்தின் பைசலாபாத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் பங்கேற்று பேசிய முன்னாள் பிரதமர் இம்ரான் கான், “பாகிஸ்தான் மீது படையெடுக்காமலேயே அமெரிக்கா அதனை அடிமையாக்கி உள்ளது”-என்றார்.

## கார்கிவிலிருந்து ரஷ்ய படை விரட்டியடிப்பு

# போரில் உக்ரைன் கை ஓங்குகிறது டான்பாஸையும் மீட்க தீவிர சண்டை



உக்ரைனின் 2வது பெரிய நகரமான கார்கிவ்வில் இருந்து ரஷ்ய படைகள் விரட்டியடிக்கப்பட்டுள்ளன. இதே போல கிழக்கு உக்ரைனான டான்பாஸையும் மீட்க உக்ரைன் சண்டையை தீவிரப்படுத்தி உள்ளது. இதனால், இரு நாடுகளுக்கு இடையேயான போரில் உக்ரைன் கை ஓங்கி இருக்கிறது. நேட்டோ அமைப்பில் உக்ரைன் சேர்வதை எதிர்த்து அந்நாட்டின் மீது போர் தொடுத்த ரஷ்யா 3வது மாதமாக சண்டையிட்டு வருகிறது. மரியுபோல், கார்கிவ் நகரங்களையும், தலைநகர் கீவ்வின் புறநகர்களையும் சர்வ நாசமாக்கிய ரஷ்ய படை தற்போது போரில் தொய்வடைந்துள்ளது.

உக்ரைனுக்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் தொடர்ந்து ஆயுதங்களை வழங்கி உதவி வருகின்றன. நேட்டோ அமைப்பும் உக்ரைனுக்கு தொடர்ந்து ராணுவ உதவி வழங்கப்படும் என அறிவித்துள்ளது. இதன் காரணமாக, தற்போது போரில் உக்ரைனின் கை ஓங்கி உள்ளது. நீண்ட சண்டைக்குப் பிறகு நாட்டின் 2வது பெரிய நகரமான கார்கிவ்வில் இருந்து ரஷ்ய படைகளை உக்ரைன் விரட்டி அடித்துள்ளது. உக்ரைன் ராணுவம், ரஷ்யாவின் எல்லை வரை ரஷ்ய படையினரை பின்னுக்கு தள்ளியிருப்பதாக பிராந்திய ராணுவ தளபதி தெரிவித்துள்ளார்.

மேலும், கார்கிவ்வின் அடையாளம் தெரியாத பகுதியில் உக்ரைன் ராணுவ வீரர்கள் தாங்கிகளில் வலம் வருவது போன்ற வீடியோவை அந்நாட்டு ராணுவம் வெளியிட்டுள்ளது. இதன் காரணமாக கார்கிவ் பெருமளவு போர் ஓய்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது கார்கிவ்வின் இசூம் பகுதியில் மட்டும் ரஷ்யா தனது நிலையை தக்க வைத்திருப்பதாக கூறப்படுகிறது. இதே போல மரியுபோலில் உள்ள இரும்பு ஆலையில் இன்னும் தொடர்ந்து சண்டை நடக்கிறது. அங்கு பதுங்கி உள்ள உக்ரைன் வீரர்கள் ரஷ்யாவின் தாக்குதலை எதிர்கொண்டு பதிலடி தந்து வருகின்றனர்.

2 மாதமாக நடந்துள்ள போரில் தற்போது வடகிழக்கு பகுதிகளை உக்ரைன் மீண்டும் வசப்படுத்தி உள்ளது. கிழக்கு உக்ரைனான டான்பாஸில் தொடர்ந்து சண்டை தீவிரமாக இருக்கிறது. இப்பகுதியை தக்க வைக்க ரஷ்ய படை பயங்கர தாக்குதல் நடத்தி வருகிறது. குடியிருப்பு, மருத்துவமனை, ராணுவ நிலைகளை குறிவைத்து குண்டுகளை வீசி வருகிறது. ஏற்கனவே தலைநகர் கீவ், கார்கிவ்வை கைப்பற்றும் ரஷ்யாவின் முயற்சி தோல்வி அடைந்துள்ளதால், டான்பாஸை கட்டுப்பாட்டில் கொண்டு வருவது ரஷ்யாவின் முக்கிய நோக்கமாக உள்ளது.

இதற்கிடையே, டான்பாஸ் பிராந்தியத்தில் இருந்து ரஷ்யாவை வெளியேற்ற தயாராகி வருவதாக உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட வீடியோ உரையில், “கிழக்கு உக்ரைனில் ரஷ்யாவின் தாக்குதலை முறியடிக்க தயாராகி வருகிறோம். ரஷ்யாவின் புதிய தாக்குதலை எதிர்கொள்ளவும் நாங்கள் தயாராகி வருகிறோம். ஆக்கிரமிப்பாளர்கள் இறுதி கட்டத்தில் இருப்பதை இன்னும் ஏற்கவில்லை” என்று கூறி உள்ளார். இப்போர் இந்தாண்டு இறுதிக்குள் முடிவடையும் என்றும், உக்ரைன் வெற்றி பெறும் என்றும் இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளின் உளவுப்பிரிவுகள் கணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### பின்லாந்து, சுவீடனுக்கு ரஷ்யா கடும் எச்சரிக்கை


உக்ரைனைப் போல பின்லாந்தும், சுவீடனும் நேட்டோவில் சேர விருப்பம் தெரிவித்துள்ளன. இதில் பின்லாந்து நாடு நேட்டோவில் இணைய விண்ணப்பிக்க முடிவு செய்திருப்பதாக கடந்த 2 தினங்களுக்கு முன் அறிவித்தது. இதற்கு ரஷ்யா கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது. அதன் துணை வெளியுறவு செயலாளர் செர்ஜி ரியாப்கோப் நேற்று தனது பேட்டியில், “இது மற்றொரு மிகப் பெரிய தவறாகும். இது ராணுவ பதற்றத்தை மேலும் அதிகரிக்கும்” என எச்சரித்துள்ளார்.

### புடினுக்கு ரத்த புற்றுநோய்

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் சமீப நாள்களாக பொது நிகழ்ச்சிகளில் கம்பீரமின்றி சோர்ந்து காணப்படுகிறார். அவருக்கு உடல் பாதிப்புகள் இருக்கின்றன கூறப்படும் நிலையில், புடினுக்கு ரத்த புற்றுநோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக இங்கிலாந்து உளவாளி கிறிஸ்டோபர் ஸ்டீல், ஸ்கை நியூஸ் ஊடகத்திற்கு அளித்த பேட்டியில் கூறி உள்ளார். மேலும், புடினை ஆட்சியில் இருந்து அகற்ற ரஷ்யாவில் சதித்திட்டங்கள் நடக்கின்றன எனவும், ஓகஸ்ட் மாதத்திற்குள் மிகப்பெரிய திருப்புமுனை ஏற்படும் என்றும் உக்ரைன் நாட்டு உளவுத்துறை தகவல் தெரிவித்துள்ளது. இதற்கிடையே, உக்ரைன் போருக்கு கண்டனம் தெரிவித்து அமெரிக்காவின் பிரபல உணவகமான மெக் டொனல்ட்ஸ் ரஷ்யாவில் தனது தொழிலை கைவிடுவதாக அறிவித் துள்ளது.

# அருணாச்சலப் பிரதேச எல்லையில் உள்கட்டமைப்பை உருவாக்கும் சீனா இந்திய ராணுவம் தயார் நிலையில் இருப்பதாக கிழக்கு தளபதி தெரிவிப்பு



இந்தியா – சீனா நாடுகளுக்கு இடையே எல்லைப் பிரச்சினை நீடித்து வரும் நிலையில் இது வரை நடத்தப்பட்ட பல்வேறு கட்டப் பேச்சுகளில் உடன்பாடுகள் எவையும் எட்டப்படவில்லை.

இந்தநிலையில், அருணாச்சல பிரதேச மாநிலத்தின் அருகே உள்ள சர்வதேச எல்லையில் சீன ராணுவம் உள் கட்டமைப்பை மேம்படுத்தி வருவதாக இந்திய ராணுவத்தின் கிழக்கு பிரிவு தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஆர்.பி.கலிதா தெரிவித்துள்ளார். திபெத் பிராந்தியத்தில் உண்மையான கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதிக்கு அருகே பல உள் கட்டமைப்புகளை சீன ராணுவம் மேம்படுத்தி வருகிறது எனவும் சாலை, ரயில் மற்றும் விமான இணைப்புகள் மற்றும் 5 ஜி மொபைல் இணைப்பு உள்ளிட்டவை அங்கு அமைக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

அந்தப்பகுதியில் இரண்டு எல்லைக் கிராமங்கள் அமைக்கப்பட்டுள்ளன எனவும், அவை இரட்டை நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படலாம் என்றும் அவர் தெரிவித்தார். எனினும் நிலைமையை இந்திய ராணுவம் கண்காணித்து வருகிறது என்றும், நாங்கள் எங்கள் உள்கட்டமைப்பு, திறன்கள் போன்றவற்றை நிலைமையைக் கையாளும் வகையில் மேம்படுத்துகிறோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சீனாவுடனான எல்லையில் ஊடுருவல் எதுவும் நடைபெறவில்லை என்றும், எல்லை சரியாக வரையறுக்கப்பட்டால், எந்தப் பிரச்சினையும் இருக்காது என்றும் இந்திய ராணுவத்தின் கிழக்குப் பிரிவுத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஆர்.பி.கலிதா நம்பிக்கை தெரிவித்தார். எந்த நிலையையும் எதிர்கொள்ள இந்திய ராணுவம் முழுமையாக தயாராக உள்ளது என்றும் அவர் கூறினார்.

## அரச திட்டப் பலன்கள் சாமானிய மக்களுக்கு கிடைப்பதை உறுதிசெய்ய அமைச்சர்களுக்கு பிரதமர் மோடி அறிவுறுத்து



புத்த பூர்ணிமாவை முன்னிட்டு இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி நேபாளத்தில் நேற்று சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார். புத்தர் பிறந்த இடமாகக் கருதப்படும் லும்பினியில் உள்ள புத்த கலாசார மையத்திற்கு சென்ற பிரதமர் மோடி அங்கு சிறப்பு பூசை நடத்தினார்.

அந்த நிகழ்ச்சியை முடித்துக்கொண்டு நேற்று இரவு உத்தரப் பிரதேச மாநில தலைநகர் லக்னோவுக்குச் சென்ற அவர், யோகி ஆதித்யநாத்தின் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள அமைச்சர்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டார்.

முதலமைச்சர் இல்லத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் உரையாற்றிய இந்தியப் பிரதமர், உத்தரப் பிரதேசத்தில் நல்லாட்சி மற்றும் அரசின் செயல்திறனை மேம்படுத்துவது குறித்து அமைச்சர்களுக்கு ஆலோசனைகளையும் வழங்கினார். அமைச்சர்கள் தங்களது தொகுதிகளில் அதிகபட்ச நேரத்தை செலவிடுமாறும் பிரதமர் குறிப்பிட்டார். அரசாங்கத்தின் திட்டங்களின் பலன்கள் சாமானிய மக்களை சென்றடைவதை உறுதி செய்யுமாறு அமைச்சர்களை பிரதமர் அறிவுறுத்தினார்.

அனைத்து அமைச்சர்களும் பொதுச் சேவையில் அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்ற வேண்டும் என்றும் பிரதமர் வலியுறுத்தியதாகவும். மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு நிலைமை குறித்து பிரதமர் திருப்தி அடைந்ததாகவும், இதற்காக முதல்வர் யோகி ஆதித்யநாத்திற்கு அவர் பாராட்டு தெரிவித்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ORGANISATION OF ISLAMIC COOPERATION



## இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் கருத்து தேவையற்றதென இந்திய அரசு கண்டனம்

ஜம்மு மற்றும் காஷ்மீரில் உள்ள பாராளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகளை மறுவரையறை செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள எல்லை நிர்ணய ஆணையக் குழு, இந்த மாத தொடக்கத்தில் தனது இறுதி அறிக்கையை இந்திய மத்திய அரசிடம் சமர்ப்பித்துள்ளது.

இந்த நடவடிக்கையை இஸ்லாமிய கூட்டமைப்பு நாடுகளின் ஒத்துழைப்பு அமைப்பு விமர்சனம் செய்துள்ளது. இதற்குக் கண்டனம் தெரிவித்துள்ள இந்திய மத்திய அரசு, காஷ்மீர் குறித்த இஸ்லாமிய நாடுகளின் ஒத்துழைப்பு அமைப்பின் கருத்து தேவையற்றது என குறிப்பிட்டுள்ளது.

ஒரு நாட்டின் உத்தரவின் பேரில், ஒரு தலைப்பட்சமாக வகுப்புவாத நிலைப்பாட்டுடன் செயல்படுவதை இஸ்லாமிய நாடுகளின் ஒத்துழைப்பு அமைப்பு தவிர்க்க வேண்டும், என்று இந்திய வெளியுறவு அமைச்சகச் செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்சி தெரிவித்துள்ளார். இந்தியாவின் உள் விவகாரங்கள் குறித்து இஸ்லாமிய நாடுகளின் ஒத்துழைப்பு அமைப்பு மீண்டும் தேவையற்ற கருத்துக்களை தெரிவித்துள்ளமை அதிர்ச்சியளிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசம் கடந்த காலத்தைப் போலவே, இந்தியாவின் ஒருங்கிணைந்த மற்றும் பிரிக்க முடியாத பகுதியாக இருக்கும், என்றும் அவர் திட்டவட்டமாக தெரிவித்திருக்கிறார்.




## மூத்த குடிமக்களுக்கு சலுகை நிறுத்தி வைப்பு ரயில்வேக்கு 1,500 கோடி ரூபா வருமானம்

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக கடந்த 2020 மார்ச் மாதம் மூத்த குடிமக்களுக்கான கட்டணச் சலுகை ரத்துச் செய்யப்பட்டது. மறு அறிவிப்பு வரும் வரை இந்த விடயம் அமுலில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு மூத்த குடிமக்களுக்கு கட்டணச் சலுகையை ரத்துச் செய்ததன் மூலம் இந்தியன் ரெயில்வேக்கு கடந்த 2 ஆண்டுகளில் 1500 கோடி ரூபாய் கூடுதலாக வருமானம் கிடைத்துள்ளமை தெரியவந்துள்ளது. மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த சந்திரசேகர் கவு என்ற நபர், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்த மனுவின் மூலமாக இந்த விவரம் கிடைத்துள்ளது.

2020 மார்ச் 20 ஆம் தேதி முதல் 2022 மார்ச் 31வரையிலான காலகட்டத்தில், 7.31கோடி மூத்த குடிமக்கள் ரயில்களில் பயணம் செய்துள்ளனர். கடந்த இரு ஆண்டுகளில் மூத்த குடிமக்கள் மூலம் இந்திய ரெயில்வேக்கு 3,464 கோடி ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது. இதில் கட்டணச் சலுகையை ரத்துச் செய்ததன் மூலம் 1500 கோடி ரூபாய் ரெயில்வேக்கு கிடைத்துள்ளமை தரவுகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## கோர்பேவக்ஸ் தடுப்பூசியின் விலை குறைக்கப்பட்டன

கொரோனாத் தடுப்பூசியின் தேவை பரவலாகக் காணப்படும் நிலையில், இந்தியாவின் ஹைதராபாத்தைச் சேர்ந்த பயோலாஜிக்கல்–இ என்ற நிறுவனம் உருவாக்கி உள்ள தடுப்பூசியான கோர்பேவக்ஸின் விலை குறைக்கபட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பயோலாஜிக்கல்–இ நிறுவனம் உருவாக்கியுள்ள கோர்பேவக்ஸ் தடுப்பூசியானது, இந்தியாவில் கொரோனாவுக்கு எதிரான நடவடிக்கைகளில் முக்கிய பங்கினை வகிக்கிறது. கோர்பேவக்ஸ் தடுப்பூசியானது இதுவரை 840 ரூபாய்க்கு விற்கப்பட்டுவந்த நிலையில், தடுப்பூசிக்கான தமது விலையை 250 ரூபாயாக குறைத்துள்ளதாக பயோலாஜிக்கல்–இ நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, வரிகளுடன் சேர்ந்து 400 ரூபாய் என்ற விலையில் பயனாளிகளுக்கு தடுப்பூசி கிடைக்கும் என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.



# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கல்முனை நகரில் நேற்று நிகழ்வு






(நூருல் ஹுதா உமர்)

முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தின் நான்காம் நாள் நினைவேந்தல் கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் ஒழுங்கமைப்பில் கல்முனை நகரின் மத்தியில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது. கல்முனை மாநகரசபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், ஞா.சிறிநேசன், க.கோடீஸ்வரன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எம்.இராஜேஸ்வரன் மற்றும் கல்முனை மாநகரசபை உறுப்பினர்கள், இளைஞர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது முள்ளிவாய்க்கால் மண்ணில் உறவுகள் துன்ப துயரங்கள், ரணங்களோடு சேர்த்து உண்ண உணவின்றி ஒரு வேளை உணவாக கஞ்சியை அருந்திய மையை நினைவு கூரும் முகமாக முள்ளிவாய்க்கால் கஞ்சி தயாரிக்கப்பட்டு பொது மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. அத்துடன் இறுதி யுத்தத்தில் உயிர்நீத்த அனைத்து உறவுகளுக்குமாக ஈகைச் சுடரேற்றப்பட்டு, அகவணக்கமும் செலுத்தப் பட்டது.

## அம்பாறையில் முப்பெரு விழா ஏற்பாட்டுக் குழு கூடி ஆராய்வு




(காரைதீவு நிருபர்)

அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர் மேம்பாட்டுப் பேரவையின் முப்பெரு விழாவிற்கான ஏற்பாட்டுக் குழு கூட்டம் நேற்று சாய்ந்தமருது அல்–ஹிலால் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

பேரவையின் தலைவர் தேசபந்து ஜலீல் ஜீ தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பேரவையின் பொதுச் செயலாளர் விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா பிரதான உரை நிகழ்த்தினார்.

அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர் மேம்பாட்டுப் பேரவையின் நிறைவேற்று சபை உயர்பீட நிர்வாகிகளின் தீர்மானத்திற்கிணங்க அட்சயம் கவிதைத்தொகுதி வெளியீடு, சிரேஷ்ட கவிஞர்களின் கவிதை வாசித்தல், பாராட்டுப் பத்திரம் வழங்கல், அம்பாறை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பெண் ஆளுமைகளுக்கு மங்கையர் திலகம் விருதுகள் வழங்கிக் கௌரவித்தல் ஆகிய முப்பெரு விழா எதிர்வரும் ஜூன் மாதம் 05 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பல மேடை நிகழ்ச்சிகள் உள்ளடங்கலாக காலை 8.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை சாய்ந்தமருது அல்–ஹிலால் வித்தியாலயத்தில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பேரவையின் நிறைவேற்று உயர்பீட நிர்வாகிகள் கலந்து கொண்ட இந்நிகழ்வில், இணைப்பாளர்கள் அடங்கலாக நிதியீட்டக் குழு, வெளியீட்டுக் குழு, ஊடகப் பிரசாரக் குழு, சேமநலன்புரிக் குழு மற்றும் கலை கலாசாரக் குழு என ஐந்து குழுக்களாகப் பிரிக்கப்பட்டு குழுப் புகைப்படங்கள் மற்றும்பேரவையின்நிறைவேற்றுஉயர்சபையின் உறுப்பினர்கள் அடங்கலான புகைப்படங்களும் எடுக்கப்பட்டு, பொறுப்புக்கள் வழங்கப்பட்டன. ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொரு பிரதிநிதி நியமிக்கப்பட்டு முப்பெரும் விழாவுக்குரிய ஒத்திகைகளும் பார்க்கப்பட்டது. பேரவையின் நிர்வாக குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்து சிறப்பித்தார்கள்.

## சாய்ந்தமருதில் இரண்டு கடைகள் இரவில் உடைக்கப்பட்டு திருட்டு

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாய்ந்தமருது பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இரண்டு கடைகள் உடைக்கப்பட்டு சூறையாடப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது ஜும்மாப் பள்ளிவாசலுக்குச் சொந்தமான கடைத்தொகுதியில் இரண்டாம் இலக்கக்கடை மற்றும் 12ஆம் இலக்கக் கடைகள் உடைக்கப்பட்டு ரொக்கப்பணமும் பொருள்களும் சூறையாடப்பட்டுள்ளன எனக் கடை உரிமையாளர்கள் பொலிஸாரிடம் தெரித்துள்ளனர்.

கடை உரிமையாளர் கடைக்குள் இருந்த 57ஆயிரம் ரூபா பணமும் பல பொருள்களும் சுருட்டப்பட்டுள்ளன எனப் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

மற்றைய தேநீர்க்கடை உரிமையானர் பொலிசாரின் விசாரனையின் போது கடை உடைக்கப்பட்டுள்ளதாகவும் பொருள்கள் ஒன்றும் களவாடப்படவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

திருட்டுத் தொடர்பாக சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.எம். சம்சுதீன் வழிகாட்டலில் குற்றத் தடுப்புப் பிரிவினர் விசாரனைகளை முன்னெடுத்துள்ளனர். அம்பாறை புலனாய்வுத்துறை பொலிசார் மோப்பநாய் உதவியுடன் மேலதிக விசாரனைகளை மேற் கொண்டு வருகின்றனர். அப்பகுதியிலுள்ள சி.சி.டி.வி. கமராக்களின் பதிவுகளைப் பெற ஏற்பாடு செய்யப்பட்டள்ளதாகவும் சாய்ந்தமருதுப் பொலிஸார் தெரிவித்தனர்.



# முள்ளிவாய்க்காலில் அனர்த்தம் ஏற்படும் அச்சத்தை முன்பே நான் உணர்ந்தேன்!



## வீ. ஆனந்த சங்கரி

முள்ளிவாய்காலில் பெரும் அனர்த்தம் ஏற்படும் என்ற அச்சத்தை முன்பே உணர்ந்த நான், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர் இரா.சம்பந்தனுக்கு பல தடைவை எச்சரித்திருந்தேன் என தமிழர் விடுதலை கூட்டணி தலைவர் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

தன்னால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் கலந்து கொள்ள முடியாமை தொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

முள்ளிவாய்க்கால் அஞ்சலி நிகழ்வில் கலந்துகொள்ள முடியாமைக்கு வருந்துகின்றேன். எங்கிருந்தாலும் எனது உணர்வுபூர்வமான பங்களிப்பு எப்போதும் உண்டு.

அன்று முள்ளிவாய்காலில் பெரும் அனர்த்தம் ஏற்படும் என்ற அச்சத்தை முன்பே உணர்ந்த நான், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர் இரா.சம்பந்தனுக்கு பல தடைவை எச்சரித்திருந்தேன்.

அவற்றில் முக்கியமான சிலவற்றில் இருந்து ஒவ்வொரு பந்தியை மட்டும் இங்கே தந்துள்ளேன். நான் உண்மைகளை மறைப்பவன் அல்லன். தெரிந்த உண்மைகளைத் தயங்காமல் வெளியிடுபவன். இறுதிக் கட்டத்தில் விடுதலை புலிகளின் தொலைபேசி அழைப்பைக் கூட ஏற்க மறுத்து அவர்களையும் மக்களையும் நட்டாற்றில் தவிக்கவிட்டமை மிகப் பெரிய துரதிஷ்டமாகும்.

மேற்குறிப்பிட்ட கடிதத்தின் பகுதிகள் கீழ்வருமாறு.

1.'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்னியில் அகப்பட்டுள்ள அப்பாவி மக்களைக் காப்பாற்ற வேண்டும். அன்றேல் தங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளைத் துறக்க வேண்டும்' என தமிழர் விடுதலைக் கூட்டணி அவர்களை வேண்டுகிறது என்ற தலைப்புடன் 11.01.2009 அன்று விடுத்த எனது அறிக்கையை படித்தது ஞாபகமில்லையா? நீங்கள் உடன் நடவடிக்கை எடுத்திருந்தால் அவர்களுக்கு தீங்கு விளைவிக்க எவருக்கும் சந்தர்ப்பம் கொடுக்காது காப்பாற்றியிருக்கலாம்.

2.'எமது மக்களைக் காப்பாற்ற கடைசி சந்தரப்பம்' என்ற தலைப்பில் 16.03.2009 அன்று தம்பி பிரபாகரனுக்கு எழுதிய கடிதத்தில் 87 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 3 லட்சத்து 30 ஆயிரம் மக்களின் சாபத்துக்;கு ஆளாக வேண்டாமென எழுதியிருந்தேன். துரதிர்ஷ்டவசமாக அவர்களிடமிருந்து பதிலெதுவும் கிடைக்கவில்லை.

அது ஓர் ஆயுதம் தாங்கிய இயக்கம். ஆகையாலும் அதன் உறுப்பினர்கள் பல்வேறு விதமாக இணைக்கப்பட்டமையாலும் அவர்கள் குறிப்பிட்ட சில நியதிகளுக்குட்பட்டு செயற்படுவார்கள் என நாம் எதிர்பார்க்க முடியாது. ஆகவே நான் அவர்களைக் குறைகூறவில்லை. ஆனால் நீங்கள் ஒரு தடவை முயற்சித்துப் பார்த்திருக்கலாம்.

3. 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதி முன்னைய ஜனாதிபதியின் செயலாளர் அரசியற் கட்சித் தலைவர்களை நாட்டின் தற்போதைய நிலைபற்றி ஆராயவென 26 ஆம் திகதி சந்திப்பு என அறிவித்திருந்தார். அந்த நேரத்தில் மிகப் பாரதூரமான விடயம் யாதெனில் யுத்தமும் தடுத்து வைக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான மக்களுமே! தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தக் கூட்டத்தை பகிஷ்கரித்தது. நீங்கள் அன்று சமுகம் கொடுத்திருந்தால் பாதுகாப்பான இடங்களுக்கு இந்த மக்களை அழைத்துச் செல்லுமாறு ஜனாதிபதியிடம் வேண்டியிருக்கலாம்.

ஒருவிதமான பதவியுமில்லாமல் கூட்டணித் தலைவர் என்ற அந்தஸ்தை வைத்து இன்னும் வன்னியில் 85 ஆயிரம் மக்கள்தான் அகப்பட்டுள்ளனர் என்று ஜனாதிபதி கூற நான் அதனை மறுத்துரைத்து 3 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று கூறியதும் ஜனாதிபதி கோபமாக உரத்துப் பேச என்னுடைய நிலைப்பாடு சரியென வற்புறுத்திக் கூறினேன்.

4. ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஸ்ரீ. சிவசங்கர் மேனன் உங்களை உடனடியாக டெல்லி வருமாறு அழைத்த போது வேறு 9 தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுடன் மாவை. சேனாதிராசா சந்தித்துப் பேசி யுத்த நிறுத்தம் செய்யாமல் இந்தியாவுக்குப் போக மாட்டோம் எனத் தீர்மானித்து டெல்லிக்கும் தெரிவித்திருந்தனர்.

ஏப்ரல் 11 இல் நான் எனது பத்திரிகை அறிக்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் இந்திய வெளிவிவகார அமைச்சின் அழைப்பை நிராகரிப்பது என எடுத்த தீர்வு முட்டாள் தனமானது மட்டுமல்ல எமது தேவைக்கு மிகவும் முரண்பட்டதாகும் எனத் தலையங்கமிட்டு அனுப்பியிருந்தேன்.

நீங்கள் அனைவரும் டெல்லிக்குச் சென்றிருந்தால் அல்லது நீங்களேனும் சென்றிருந்தால் அடித்துக்கூறுவேன் இந்திய அரசாங்கம் எமது மக்களைக் காப்பாற்ற ஓர் உறுதியான நடவடிக்கையை எடுத்திருக்கும். இப்படிச் செய்து விட்டு இப்போது நீங்கள் யாரைக் குற்றம் சாட்டுகிறீர்கள்?

5. மே 2 ஆம் திகதி இலங்கை ஜனாதிபதிக்கு பல்வேறு ஆலோசனைகளுடன் 'உடனடியாக அப்பாவி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டுவரப்படாவிட்டால் அது ஒரு பெரும் அனர்த்தத்தில் முடியும் எனக் குறிப்பிட்டிருந்தேன்.

மேலும் அந்தக் கடிதத்தில் 'அரசுக்கு ஏற்புடையதான ஒரு சர்வதேச அமைப்பைத் தெரிவுசெய்து வன்னிக்கு அனுப்பி விடுதலைப் புலிகளுடன் ஆலோசித்து இந்த மக்களைப் பாதுகாப்பாக வெளியேறுவதற்கு ஏதுவாக ஆயுதங்களைக் கையளிக்கும் பட்சத்தில் அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்க ஏதுவான நடவடிக்கைகளை எடுக்கும்படி வேண்டியதுடன் அதற்கு 2 வார அவகாசமும் கொடுக்கலாம் என வேண்டியிருந்தேன்.

ஜனாதிபதியால் கூட்டப்பட்ட கூட்டத்திற்குப் போவதற்கு உங்களுக்கு என்ன தடை இருந்தது? கலந்து கொண்டிருந்தால் சில நிபந்தனைகளுக்கு அமைய அவர்களுக்கு வசதி செய்யும்படி வற்புறுத்தியிருக்கலாம்.

6. நாடு ஒரு பெரிய அனர்த்தத்தை எதிர்நோக்கி இருப்பது தெரிந்தும் அதற்குரிய நடவடிக்கை எடுக்காமல் பிரித்தானிய நாடாளுமன்ற குழு வருகைதந்தபோது இந்திய நாடாளுமன்றத் தேர்தல் முடிந்ததும் சில அனர்த்தங்கள் ஏற்படலாம் ஆகையால் அதை தடுக்க உதவுமாறு கோரிக்கை விடுத்தீர்கள், இதன் அர்த்தம் யாதெனில் நீங்களும் உங்கள் குழுவினரும் இந்தியத் தேர்தல் முடிந்ததும் ஒரு பாரிய அனர்த்தம் நடைபெறும் என அறிந்து வைத்திருந்தீர்கள், உங்கள் குழுவில் குறைந்தது 12 உறுப்பினர்களை வெளிநாட்டில் சுற்றுலாவுக்கு அனுப்பிவிட்டு இப்படியான ஓர் உரையை ஆற்றுவதற்கு வெட்கம் இல்லையா? நான் தற்போது உங்களைக் கேட்க விரும்புவது யாதெனில் உங்கள் உறுப் பினர்கள் அனைவரினதும் தொலைபேசி கள் யுத்த கால இறுதி நாள்களில் இயங்க வில்லை என்ற கூற்று உண்மையா? இந்தக் குறிப்பை முடிப்பதற்கு முன் பஸில் ராஜபக்ஷவுக்கு நான் கூறியதாக அன்று கூடியிருந்த 22நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் என் முன்னே அவர் 'இவர் சொல்லித்தான் மூன்று லட்சத்துக்கு மேல் முள்ளிவாய்காலில் மக்கள் அகப்பட்டுள்ளனர் என எனக்குத் தெரிய வந்தது' என்று பகிரங்கமாக தெரிவித்திருந்தார்.

## வெளிநாடுகளில் இருந்து உண்டியல் ஊடாக பணம் அனுப்பினால் ஆபத்து ஏற்படும் நிலை

சட்டவிரோதமான வழிகளில் வெளிநாட்டு நாணயங்கள் மாற்றும் மையங்களை (உண்டியல் பரிமாற்றம்) சோதனையிட பொலிஸாரும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் கூட்டு நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

நாட்டில் டொலர்கள் உள்ளிட்ட வெளிநாட்டு நாணயங்களுக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள போதிலும் சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு நாணயங்களை பரிவர்த்தனை செய்யும் நிறுவனங்கள் தொடர்பில் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே பெப்பிலியான பிரதேசத்திலுள்ள வீடொன்றில் 2 கோடி ரூபாவிற்கும் அதிக பெறுமதியான 50 ஆயிரம் யூரோக்கள் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் பணம் எவ்வாறு சம்பாதித்தார்கள் அல்லது எவ்வாறு கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டது என்பது தொடர்பான தகவல்கள் எதுவும் இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை.

இதேவேளை, பொரலஸ்கமுவ பிரதேசத்தில் கடந்த 14ஆம் திகதி விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் சுமார் ஒரு கோடியே 70 லட்சம் ரூபா பெறுமதியான 47 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறான சட்டவிரோத பணப்பரிவர்த்தனைகளை முழுமையாக முறியடிக்கும் நடவடிக்கை விரைவில் முன்னெடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த வெளிநாட்டு நாணய பரிவர்த்தனை புறக்கோட்டை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் அதிக அளவில் நடைபெற்று வருவது கண்டறியப்பட்டுள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதி பொலிஸ் மா அதிபர் வருண ஜயசுந்தரவின் பூரண மேற்பார்வையின் கீழ் இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## கருத்தரங்குகள், மேலதிக வகுப்புகளுக்கு இன்று நள்ளிரவு முதல் மாணவருக்குத் தடை

க.பொ.த சாதாரண தர பரீட்சை தொடர்பான மேலதிக வகுப்புகள், கருத்தரங்குகள், விரிவுரைகள் மற்றும் செயலமர்வுகள் இன்று நள்ளிரவு 12 மணி முதல் பரீட்சை முடியும் வரை தடை செய்யப்படவுள்ளன.

இந்த நிலையில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பொதுமக்களிடம் கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளார்.

அதன்படி குறித்த தடை விதிமுறைகள் மீறப்படுவதாக தகவல் கிடைத்தால், அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கோ திற்கோ அறிவிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், க.பொ.த சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அத்தியாவசிய தேவைகளை பெற்றுக்கொள்ள விசேட தேவையுடையோருக்கு முன்னுரிமை!

எரிபொருள், உணவு, சுகாதாரம் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் விசேட தேவையுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்குமாறு அனைத்து பொது மற்றும் தனியார் நிறுவனங்களிடம் அரசாங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலை காரணமாக விசேட தேவையுடையவர்கள் அத்தியாவசிய சேவைகளுக்காக நீண்ட வரிசையில் காத்திருக்கின்றனர் என வெளியான தகவலை அடுத்து அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.05.2022இல் வெளியிடப்பெற்றது.